# T20 Current Affairs

## for

# TNPSC

## Oct - 2021

Towards Your Success

**THULIRR IAS ACADEMY**

**# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,**

**Anna Nagar West, Chennai – 40**

**http://thulirracademy.in/ | Mobile # +91 9445065552 | Telegram: Thulirr Current Affairs**

# Table of Contents

தமிழக நிகழ்வுகள் ....3
இந்திய நிகழ்வுகள் ....14
பொருளாதாரம் ....18
உலக நிகழ்வுகள் ....19
சுற்றுச்சூழல் ....21
அறிவியல் & தொழில்நுட்பம் ....22
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ....22
திட்டம் ....23
மாநாடுகள் ....24
பாதுகாப்பு ....25
கூட்டுப்பயிற்சி ....26
விருதுகள் ....26
விளையாட்டு நிகழ்வுகள் ....28
புள்ளி விவரம் ....29
புவிசார்குறியீடு ....30
புத்தகம் ....31
முக்கிய தினம் ....32

**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirraacademy.in/currentaffairs.php?ca_category=T20-T



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## தமிழக நிகழ்வுகள்

- **கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி: மாநகராட்சிகளாகின**
  - கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி ஆகிய நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கான அவசரச்சட்டத்தை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. இதன்மூலம், தமிழகத்தில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 20-ஆக உயர்கிறது.
  - தமிழகத்தில் மொத்தம் 15 மாநகராட்சிகள் உள்ளன. கும்பகோணத்தை மாநகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு பரிந்துரைகள் ஏற்கப்பட்டு அதற்கான உத்தரவு அரசால் அண்மையில் பிறப்பிக்கப்பட்டது. இதனால் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 16-ஆக உயர்ந்தது.
- **முத்துலட்சுமி ரெட்டி நிதியுதவி: புகார் எண் - 104**
  - டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி, கர்ப்பிணியருக்கு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால் 104 மருத்துவ சேவை மையத்தைத் தொடர்பு கொள்ளலாம் என பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வ விநாயகம் தெரிவித்துள்ளார்.
  - மத்திய, மாநில நிதி பங்களிப்புடன் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1987-இல் தொடங்கப்பட்டு ரூ.300 வழங்கப்பட்டது. அதன்பின் படிப்படியாக நிதியுதவி உயர்த்தப்பட்டு 2018-இல் இருந்து ரூ.18,000-ஆக வழங்கப்படுகிறது.
- **சென்னை மெட்ரோ திட்டம்: ஏஐஐபி வங்கி ரூ.2,600 கோடி கடனுதவி**
  - சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்காக சுமார் ரூ.2,600 கோடியை ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank) கடனாக வழங்கியுள்ளது.
  - AIIB: துவக்கம் – ஜனவரி 16, 2016.
  - தலைமையகம் – பெய்ஜிங், சீனா, உறுப்பினர் நாடுகள் - 103
- **“ஆபரேஷன் டிஸ்ஆர்ம்“**
  - “ஆபரேஷன் டிஸ்ஆர்ம்” தமிழகத்தில் 3325 கொலை குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- **'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்'**
  - கரோனா பெருந்தொற்றால் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியைக் குறைக்கும் வகையில் இல்லம் தேடிக் கல்வி என்ற புதிய திட்டத்தை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி தொடக்கி வைத்தார்.
- **ரூ.200 கோடியில் இல்லம் தேடிக் கல்வித் திட்டம்**
  - ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களின் கற்றல் இடைவெளியை ஈடுசெய்யும் நோக்கத்தில் ரூ.200 கோடி செலவில் இல்லம் தேடிக் கல்வி



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் முதலியார் குப்பத்தில் தொடக்கி வைத்தார்.

- கரோனா பரவல் காரணமாக ஒன்று முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளின் கற்றல் இடைவெளியை ஈடுசெய்யும் வகையில் இல்லம் தேடிக் கல்வி என்ற திட்டத்தை ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம் செயல்படுத்த உள்ளது.
- இந்தத் திட்டத்தின்படி மாணவர்களின் வீடுகளில் அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான இடங்களில் மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை கற்றல் செயல்பாடுகள் நடைபெறும்.

❖ **உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணிக்க முன்னேற்றம் இணையதளம்**

- உள்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்காணித்து வளர்ச்சிகளை ஆய்வு செய்வதற்கென உருவாக்கப்பட்டுள்ள தனி இணையதளத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின், தொடக்கி வைத்தார்.
- தமிழகத்தில் ரூ.1 லட்சம் கோடிக்கான 200 முக்கிய உள்கட்டமைப்புத்திட்டங்கள் தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவின் மூலமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன.
- இந்தத் திட்டங்களின் வளர்ச்சிகளை ஆய்வு செய்து அவற்றை தொடர்ந்து கண்காணிக்க 'முன்னேற்றம்' என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த இணையதளத்தில், ஒவ்வொரு திட்டம் குறித்த விவரங்களும் இடம்பெற்றுள்ளன.

❖ **'மக்கள் பள்ளி திட்டம்'**

- தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்காக 'மக்கள் பள்ளி' என்ற திட்டம் வரும் அக்டோபர் 18-ஆம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

❖ **"tnkhadi" செயலி**

- கதர் கிராமத் தொழில் வாரிய பொருள்களை கொள்முதல் செய்திட தனி கைப்பேசி செயலி ("tnkhadi") உருவாக்கப்பட்டுள்ளது. இதனை முதல்வர் அறிமுகப்படுத்தினார்.

❖ **செஞ்சி அருகே பல்லவர் கால வனதுர்கா கோயில்**

- செஞ்சி அருகே உள்ள பக்கம் கிராமத்தில் அமைந்துள்ள பல்லவர் கால வனதுர்கா கோயிலை சீரமைக்க இந்திய தொல்லியல் ஆய்வு நிறுவனம் நிதி கோரியுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள பழமையான பல்லவர் கால செங்கல்லால் ஆன கோயிலாக கருதப்படுகிறது. இந்த கோயிலில் உள்ள ஓவியங்கள் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் உள்ள ஓவியங்களை போல் இருக்கின்றன.

❖ **மேம்படுத்தப்பட்ட கணினி விசைப் பலகைக்கு கீழடி பெயர்**

- தமிழக அரசின் மேம்படுத்தப்பட்ட கணினி விசைப்பலகைக்கு கீழடி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட புதிய வசதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் ஏற்கெனவே கணினி விசைப் பலகை, தமிழிணையம்-ஒருங்குறி மாற்றி ஆகிய இரு தமிழ் மென்பொருள்கள் பயன்பாட்டில் உள்ளன. இவை பல புதிய வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- அதற்கு கீழடி-தமிழிணைய விசைப்பலகை மற்றும் தமிழி-தமிழிணைய ஒருங்குறி மாற்றி எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

❖ **ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம்**

- வைகுண்டம் அருகே ஆதிச்சநல்லூரில் மத்திய தொல்லியல் துறையின் அகழாய்வுப் பணி தொடங்குகிறது. உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் விரைவில் இங்கு அமைக்கப்பட இருக்கிறது.
- மத்திய பட்ஜெட்டில் அறிவித்தபடி, நாட்டில் 'வரலாற்றுச் சின்னமான தளங்களாக' உருவாக்கப்படும் 5 தொல்பொருள் தளங்களில் ஆதிச்சநல்லூரும் ஒன்றாகும். தென்னிந்தியாவில் அமையவுள்ள ஒரே தளம் இது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
- "ஆதிச்சநல்லூர் கி.மு. 1,000 ஆண்டுக்கு முந்தைய நாட்டின் மிகப் பழமையான இரும்புக்கால தளங்களில் ஒன்றாகும். தென்னிந்தியாவிலேயே உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் முதன்முதலாக இங்குதான் அமைக்கப்பட உள்ளது.

❖ **ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கையில் அகழாய்வு நிறைவு**

- ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கையில், 3,200 ஆண்டுகளுக்கு முந்தைய "பொருநை நாகரிகத்தை" வெளிக்கொணர்ந்த அகழாய்வுப் பணிகள் நிறைவடைந்தன. இதில், 2,000-க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- கொற்கையில் 1,000-க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்தன. குறிப்பாக, 9 அடுக்குகள் கொண்ட திரவப்பொருட்களை வடிகட்டும் குழாய், சங்க இலக்கியத்தில் கூறப்படும் 29 அடுக்குகள் கொண்ட செங்கல் கட்டுமான அமைப்பு, இரண்டடுக்கு கொள்கலன், சங்கு அறுக்கும் தொழிற்கூடம், தமிழ் பிராமி எழுத்துகள், குறியீடுகள், சங்குகள், சங்கு வளையல்கள், வண்ண பாசிமணிகள், பானைகள், ரோம் மற்றும் சீன நாட்டுப் பானை ஓடுகள், சுடுமண் உருவபொம்மைகள் என ஏராளமான பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

❖ **சோழர் கால கல்வெட்டில் குடிமை பணி அதிகாரிகளுக்கான தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன**

- காஞ்சிபுரம் மாவட்டம் தென்னேரி கிராமத்தில் உள்ள கல்வெட்டில் கிராம நிர்வாக சபை உறுப்பினர் (பெரும்குறி சபை) ஆவதற்கான அடிப்படை தகுதிகள் பற்றியும் பண்ணையில் உற்பத்தியாகும் பொருட்களின் வரி விதிப்பு உள்ளிட்ட குறிப்புகளும் உள்ளன.
- உத்தம சோழனின் நினைவாக செம்பியன் மஹாதேவி (ராஜ ராஜ சோழனின் பாட்டி) கட்டிய கோயில்களும் கந்தலீஸ்வரர் கோயிலில் இந்த கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- தென்னேரி பற்றிய சங்ககால குறிப்புகள் இந்த கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன. பெரும்பானாற்றுப்படையில் இந்த ஏரி தொண்டைமான் இளந்திரையனால் உருவாக்கப்பட்டது.
- தசக்குடியில் கிடைக்கபெற்ற பல்லவகால செப்பு தகடுகளில் இந்த ஏரியின் பெயர் திரையன் ஏரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பெயர் மறுவி "தென்னேரி" என்று அழைக்கப்படுகிறது.

❖ **முதியோர் நல மருத்துவர் வி.எஸ். நடராஜனுக்கு தேசிய விருது**

- தில்லியில் நடைபெற்ற விழாவில் குடியரசு துணைத்தலைவர் வெங்கையா நாயுடு 'வயோஷ்ரேஷ்தா சமான்' விருதை டாக்டர் வி.எஸ்.நடராஜனுக்கு வழங்கி கௌரவித்தார்.
- மத்திய அரசின் சமூக நீதித்துறை மற்றும் அதிகாரம் அளித்தல் துறை சார்பில் ஒவ்வோர் ஆண்டும் உலக முதியோர் தினமான அக்டோபர் 1-ம் தேதி முதியோர் நலனுக்கு சிறப்பான சேவையாற்றுபவர்களுக்கு விருது வழங்கப்படுகிறது.

❖ **ஜனவரி 12 'புலம்பெயர்ந்த உலகத் தமிழர் நாள் முதல்வர் அறிவிப்பு**

- வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க 'புலம்பெயர் தமிழர் நலவாரியம்' என்ற புதிய வாரியம் தோற்றுவிக்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ம் நாள் 'புலம்பெயர்ந்த உலகத்தமிழர் நாளாக' கொண்டாடப்படும் எனவும் அறிவித்துள்ளார்.
- அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் பிரதிநிதிகள் 13 பேரைக் கொண்டு 'புலம்பெயர் தமிழர் நல வாரியம்' அமைக்கப்படும்.
- ஐந்து கோடி ரூபாய், 'புலம்பெயர் தமிழர் நலநிதி' என மாநில அரசின் முன்பணத்தைக் கொண்டு உருவாக்கப்படும்.
- புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உளப்பூர்வமான மற்றும் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுவாழ் தமிழர் நலச்சட்டம் 2011ம் ஆண்டு மார்ச் 1-ம் நாள் அரசால் இயற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

❖ **இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம்**

- இந்தியாவின் முதல் நடமாடும் நூலகம் மன்னார்குடி அருகே உள்ள மேலவாசலில் அக்டோபர் 21, 1931 ஆம் அண்டு திரு S.R.ரங்கநாதன் அவர்களால் தொடங்கப்பட்டது.

❖ **தேவதாசிமுறை ஒழிப்பின் முதல் குரல்**

- எட்டு வயது முதல் 11 வயதுடைய பெண் குழந்தைகள் கோவில்களில் 'பொட்டுக்கட்டுதல்' என்னும் சடங்கின் மூலம் தெய்வத்துக்கு மனைவியாக்கப்பட்டு அக்கோவில்களிலேயே விடப்படுவார்கள். இப்பெண்கள் தேவதாசியர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இறக்கும் வரைக்கும் தீர்க்க சுமங்கலிகளாகவும் சமூகத்தில் மிகுந்த மரியாதைக்குரியவர்களாகவும் வாழ்ந்தனர்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- 1901இல் திருநெல்வேலி மாவட்டம் பெருங்குளம் என்கிற ஊரிலுள்ள ஒரு கோவிலில் இருந்து தப்பிவந்த தேவதாசியான லட்சுமி (பரீனா) மூலம் தேவதாசியரின் உண்மையான முகத்தை அறிந்து அதிர்ந்தார். அந்தப் பெண் குழந்தையே தேவதாசி முறையை ஒழிக்க வேண்டும் என்பது அவரது லட்சியமாக உருப்பெறக் காரணமானாள்.
- பல நூற்றாண்டுகளாக இருந்துவந்த தேவதாசி முறையை எதிர்த்துப் போராடிய அயல்நாட்டுப் பெண்ணான ஏமி கார்மைக்கேலுக்குச் சுமார் கால் நூற்றாண்டுகளுக்குப் பிறகே டாக்டர் முத்துலட்சுமி, மூவலூர் ராமாமிர்தம் ஆகிய இந்தியப் பெண்களின் குரல்களும் இணைந்து ஒலித்தன.

❖ **காஞ்சிபுரம் : 5 நெசவாளர்களுக்கு தேசிய விருது**

- 2018-ஆம் ஆண்டுக்கான நெசவாளர்களுக்கே உரிய மத்திய அரசின் உயரிய விருதான சந்த் கபீர் விருதும், 2019-ஆம் ஆண்டுக்கான தேசிய விருது 4 நெசவாளர்களுக்கும் கிடைத்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டுக்கான இந்த விருதை காஞ்சிபுரம் மேட்டுப்பாளையத்தை பகுதியை சேர்ந்த பி.கிருஷ்ணமூர்த்தி பெறவுள்ளார்.
- தமிழகத்தில் காஞ்சிபுரம் மட்டுமே சிறந்த சிறந்த நெசவாளர்களுக்கான 5 தேசிய விருதுகளை பெற்றிருக்கிறது.

❖ **சென்னை வெள்ளத் தடுப்புத் திட்டம் ADB ரூ.1,877 கோடி கடன்**

- சென்னையில் வெள்ளத்தடுப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.1,877 கோடி (251 மில்லியன் டாலர்) கடனுதவி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் ஆசிய வளர்ச்சி வங்கியும் (Asian Development Bank) கையொப்பமிட்டன.
- ADB - துவக்கம்: டிசம்பர் 19, 1966. உறுப்பினர் நாடுகள் – 68
- தலைமையகம் - Mandaluyong, Manila, Philippines
- தலைவர் - மசட்சுகு அசகாவா (Masatsugu Asakawa) ஜப்பான்.

❖ **வெள்ளேரி கிராமத்துக்கு பிரதமர் பாராட்டு**

- 'ஜல் ஜீவன்' திட்டத்தின் கீழ், 100 சதவீத வீடுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கியதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 5 கிராமங்களில் ஒன்றான திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அருகே வெள்ளேரி கிராமத்தில் காந்தி ஜெயந்தியையொட்டி கிராமசபை கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், காணொலி வாயிலாக கலந்துரையாடிய பிரதமர் மோடி வெள்ளேரி கிராமத்துக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

❖ **சென்னை இதய மருத்துவர் பினாய் ஜானுக்கு விருது**

- மருத்துவத்துறையில் சாதனை நிகழ்த்திய மருத்துவர்களுக்கான சாதனையாளர் விருது சென்னை நவீன இதய மருத்துவச் சிகிச்சை (இன்டர்வென்ஷனல் கார்டியாலஜி) மருத்துவர் பினாய் ஜானுக்கு வழங்கப்பட்டுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **பாரத் நெட் & தமிழக அரசு தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம்**
  - பாரத் நெட் (Bharat Net) திட்டத்தை அமல்படுத்த தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்பரேஷன் நிறுவனம் (TANFINFT) தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம்.
  - அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கும் 1Gbps வேகத்தில் இணையதள இணைப்பு வழங்குவதற்காக 2011 ஆம் ஆண்டு தேசிய ஆப்டிகல் ஃபைபர் நெட்வொர்க் என்ற பெயரில் தொடங்கப்பட்ட திட்டமாகும்.
  - 2015-ம் ஆண்டு பாரத்நெட் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்திட்டம் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- **தனிப்பெருங்கருணை நாள் கடைப்பிடிப்பு**
  - அக்டோபர் 5, வள்ளலார் பிறந்த தினம், தனிப்பெருங்கருணை தினமாக கடைப்பிடிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- **திருநங்கைகள் நல வாரியம் புதிதாக அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமனம்**
  - திருநங்கைகள் நலவாரியத்துக்கு புதிதாக அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
  - திருநங்கைகள் நல வாரியம் கடந்த 2008- ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.
  - அரசுத் துறைகளின் பிரதிநிதிகள் அலுவல் சார் உறுப்பினர்களாகவும், திருநங்கைகள் அலுவல் சாரா உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.
  - அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகள்.
  - மத்திய சமூகநீதி அமைச்சகத்தால் 21-வது ஆகஸ்ட் 2020-ம் ஆண்டு திருநங்கைகளுக்கான கவுன்சில் தொடங்கப்பட்டது.
  - 2014 – திருநங்கைகளை மூன்றாம் பாலினத்தவராக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. (சட்ட சேவைகள் ஆணையம் Vs மத்திய அரசு வழக்கு)
  - ஏப்ரல் 15 திருநங்கைகள் தினம்
- **அண்ணா மேலாண்மை நிலையம் பெயர் மாற்றம்**
  - அண்ணா மேலாண்மை நிலையம், இனி அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி என்ற பெயரில் அழைக்கப்படும் என தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு அறிவித்துள்ளார்.
- **SC/ST நல ஆணையம் தலைவர்-உறுப்பினர்கள் நியமனம்**
  - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்தின் தலைவராக சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - தலித்முரசு இதழின் ஆசிரியர் புனிதப் பாண்டியன், துணைத் தலைவராகவும் நியமிக்கபட்டுள்ளார்.
  - வழக்குரைஞர் குமாரதேவன், எழுத்தாளர் எழில் இளங்கோவன், சமூக செயல்பாட்டாளர் ஆனைமலை லீலாவதி தனராஜ், வழக்குரைஞர் பொ.இளஞ்செழியன், அரசு கல்லூரி பேராசிரியர் கே.ரகுபதி ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **2,650 ஆஷா பணியாளர்களுக்கு அடையாள அட்டை**
  - தமிழகம் முழுவதும் பணியாற்றும் 2,650 ஆஷா பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும் என மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.
  - தேசிய சுகாதார திட்டத்தின்படி ஆண்டுகளுக்கு முன்பு பகுதிநேர பணியாளர்களாக ஆஷா பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
  - ஆஷா பணியாளர்களுக்கு மாதம் தோறும் ரூ.5 ஆயிரம் வழங்கப்படுகிறது. காசநோய், கர்ப்பிணிகளை கண்டறிந்து பதிவு செய்பவர்களுக்கு ரூ.1,000 கடுதலாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். 42 வயதுக்குட்பட்ட பிளஸ் 2 முடித்தவர்களுக்கு இரண்டு ஆண்டு பயிற்சி கொடுத்து ஆண்டுக்கு 60 பேரை நிரந்தர செவிலியராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- **மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா**
  - சென்னை மாநகரத் தமிழ்ச்சங்கம் சார்பில் மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டு விழா முகப்பேரில் நடைபெற்றது.
  - இவ்விழாவில் 100 கவிஞர்கள் பங்கேற்ற 'எழுதுகோல் எங்கள் செங்கோல்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.
  - இதில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன பேராசிரியர் நா.சுலோசனா எழுதிய 'ஆயிரம் பிறை கண்ட அண்ணாச்சி' நூல் அறிமுகப்படுத்தப்பட்டது.
  - தொடர்ந்து, சங்கத்தின் தலைவர் பாரதி சுகுமாரன் எழுதிய யுகம் யுகமாய், முனைவர் என்.வி.சுப்புராமன் எழுதிய பாரதியார் ஆங்கில நூல் ஆகியவை வெளியிடப்பட்டன.

| மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா விருதுகள் | |
|---|---|
| கல்விச் செம்மல் விருது | பொன்.குமார் (பள்ளிக் கல்வித்துறை இணை இயக்குநர்) |
| வளர்தமிழ் வித்தகர் விருது | கோ.விசயராகவன் |
| இலக்கியவாணர் விருது | வடுகம்பட்டி சிவக்குமார் |
| எழுத்துப் பேரொளி | திலகவதி (ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரி) |

- **ஆஷா திட்டம்**
  - நோக்கம்: உள்ளூர் பெண்களை சுகாதார பணியாளர்களாகவும், செவிலியர்களாக பயிற்சி தருவதே இதன் நோக்கம்.உள்ளூர் பெண்களை சுகாதார பணியாளர்களாகவும், செவிலியர்களாக பயிற்சி தருவது.
  - இத்திட்டம் இந்தியாவின் தேசிய கிராமப்புற சுகாதர திட்டத்தின் (NRHM) ஒரு பகுதியாக சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் (MoHFW) செயல்படுத்தப்படுகிறது.
  - 2005-ம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **கனடாவின் பாதுகாப்பு அமைச்சராக தமிழர்**
  - கனடா நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக தமிழக மரபு வழியைச் சேர்ந்த அனிதா ஆனந்த் நியமிக்கப்பட்டுள்ளார்.
- **இலங்கைத் தமிழர் நலனுக்கான ஆலோசனைக் குழு**
  - இலங்கைத் தமிழர் நலனுக்கான ஆலோசனைக்குழு, அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- **மருத்துவ சேவைகளை ஆக்கபூர்வமாக அளிப்பதில் தமிழகம் முதலிடம்**
  - மருத்துவ சேவைகள் உரிய பயனாளிகளை சென்றடையும் மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. ஜிண்டால் குளோபல் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் இத்தகவல் இடம்பெற்றுள்ளது.
- **பள்ளிக் கல்வி தரக் குறியீட்டில் ஒட்டுமொத்த செயல்திறன் பட்டியல்**
  - பள்ளிக் கல்வி தரக் குறியீட்டில் ஒட்டுமொத்த செயல்திறன் பட்டியலில் 20 பெரிய மாநிலங்களில் தமிழகம் (73.4%) 2-வது இடம் வகிக்கிறது. முதல் இடத்தில் கேரளா (76.6%), கடைசி இடத்தில் உத்தர பிரதேசம் (36.4%) உள்ளன என்று நிதி ஆயோக் அமைப்பு தெரிவித்துள்ளது.
- **மக்கள் திட்டமிடல் இயக்கம்**
  - 2022-23 நிதி ஆண்டுக்கான கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டம் தயாரிப்பதற்காக வரும் (2021) அக்டோபர் 2-ம்தேதி முதல் டிசம்பர் 31-ம் தேதிவரை தமிழகத்தில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளிலும் மக்கள்திட்டமிடல் இயக்கம் தொடங்கப்படும்.
  - இத்திட்டத்தின் மூலம் ஊராட்சிகளில் உள்ள வளஆதாரங்களை கண்டறியும் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- **சமத்துவ பெரியார் பட்டம் – கலைஞர்**
  - முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு சமத்துவ பெரியார் என்ற பட்டத்தை திருமாவளவன் அளித்துள்ளார்.
- **உங்கள் துறையில் முதலமைச்சர்- காவலர் குறை தீர்க்கும் முகாம்**
  - காவலர்களின் குறைகளை களைந்திட "உங்கள் துறையில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் காவலர்களிடம் மனுக்களை முதல்வர் மு.க.ஸ்டாலின்பெற்றார்.
- **ஈரோடு சம்பத் நகர் பிரதான சாலை – தியாகி குமரன் சாலை**
  - ஈரோடு சம்பத் நகர் பிரதான சாலைக்கு தியாகி குமரன் சாலை என பெயர் சூட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு & கண்காணிப்பு குழு**
  - முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளது.
- **ஊரக உள்ளாட்சி தேர்தல் (வாக்குச்சீட்டு)**
  - செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது.
  - மாவட்ட ஊராட்சி உறுப்பினர் (மஞ்சள் நிறம்)
  - ஒன்றிய குழு உறுப்பினர் (பச்சை நிறம்)
  - ஊராட்சி மன்றத் தலைவர் (இளஞ்சிவப்பு நிறம்)
  - கிராம ஊராட்சி வார்டு (வெள்ளை நிறம்)
- **காசநோய் இல்லாத தமிழகம் இலக்கு - 2025**
  - தமிழகத்தில் காசநோய் குணப்படுத்தும் விகிதம் 86 சதவீதம் உயர்ந்துள்ளது.
  - தேசிய காசநோய் தடுப்புத் திட்டம் – 2020 ஆண்டு முதல் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டமாக பெயர் மாற்றப்பட்டுள்ளது.
  - 2025-ஆம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத தமிழகம் (இலக்கு)
  - காசநோய் சிகிச்சையில் – தமிழகத்திலேயே முதன்மையான மாவட்டம் திருவள்ளூர்
- **உளுந்து – பச்சைப் பயிறு அரசே நேரடியாகக் கொள்முதல்**
  - உளுந்து மற்றும் பச்சைப்பயறு விவசாயிகளிடமிருந்து அரசே நேரடியாகக் கொள்முதல் செய்யும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- **தமிழ்நாட்டின் முதல் பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா**
  - தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், நேஷனல் ஹைவே லாஜிஸ்டிக்ஸ் மேலாண்மை நிறுவனம் மற்றும் சென்னை துறைமுகம் ஆகியவை இணைந்து, பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், திருவள்ளூர் மாவட்டம், மப்பேட்டில் ரூ.1,200 கோடி முதலீட்டில் பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்காவை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
  - தமிழ்நாட்டில் அமையும் முதலாவது பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்காவாக இது அமைந்துள்ளது..
- **தமிழகத்தின் 16 வது மாநகராட்சி - கும்பகோணம் மாநகராட்சி**
  - 15 அக்டோபர் 2021 அன்று தமிழகத்தின் 16 வது மாநகராட்சியாக கும்பகோணம் உதயமானது.
- **மக்களைத் தேடி பல் மருத்துவ சேவை**
  - மக்களைத் தேடி பல் மருத்துவ சேவைகளை அளிக்கும் திட்டத்தை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைத்தார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- நடமாடும் பல் மருத்துவ வாகனத்தில், இரண்டு மருத்துவர்கள் மற்றும் இரண்டு செவிலியர்கள் இருப்பார்கள். அவர்கள் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் சென்னையின் பல்வேறு இடங்களுக்குச் சென்று மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தைப் போல மக்களைத் தேடி பல் மருத்துவம் என்கிற வகையில் மருத்துவ சேவையை வழங்கவுள்ளனர்.

❖ **'இ-முன்னேற்றம்', 'தகவல் தொழில்நுட்ப நண்பன்' - இணையதளம்**

- அக்டோபர் 22, 2021 அன்று "முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள 'இ-முன்னேற்றம்' மற்றும் 'தகவல் தொழில்நுட்ப நண்பன்' ஆகிய இரண்டு வலைத்தளங்களையும், 'கீழடி- தமிழிணைய விசைப்பலகை' மற்றும் 'தமிழி - தமிழிணைய ஒருங்குறி மாற்றி' ஆகிய இரு தமிழ் மென்பொருள்களையும் காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

❖ **இல்லம் தேடிக் கல்வித் திட்டம் - முதலியார் குப்பம்**

- அக்டோபர் 27, 2021 அன்று 1 முதல் 8-ஆம் வகுப்பு மாணவர்கள் கற்றல் இடைவெளியைக் குறைக்க விழுப்புரம் மாவட்டம் (மரக்காணம்) முதலியார் குப்பத்தில் முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.
- மாநில அரசின் 100% பங்களிப்பின் கீழ் ரூ.200 கோடி ஒதுக்கீடு
- சிறிய குழுக்கள் மூலம் தன்னார்வாளர்கள் பங்கேற்பு (மாலை 5 முதல் இரவு 7 வரை வகுப்பு நடைபெறும்)
- சிறப்பு பணி அதிகாரியாக K. இளம்பகவத் IAS நியமனம்

❖ **பனைவெல்லம் மற்றும் பனைபொருட்கள் - பயிற்சி நிலையம்**

- சாயல்குடியில் பனைவெல்லம் மற்றும் பனைபொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- நியாயவிலை கடைகளில் மூலம் **கற்பகம்** என்ற பெயரில் பனைவெல்லம் விற்பனை, பல்பொருள் அங்காடியில் **கரும்பனை** என விற்பனை செய்யப்பட உள்ளது.

❖ **சமூக நீதி கண்காணிப்பு குழு**

- சமூக நீதி நாள் – செப்டம்பர் 17 (தந்தை பெரியார் பிறந்த நாள்)
- இக்குழுவில் 1 தலைவர் மற்றும் (ஒரு பெண்) உட்பட ஏழு உறுப்பினர்கள் என எட்டு பேர் கொண்டவர்கள் இருப்பார்கள்.
- இக்குழுவில் தலைவராக சுப. வீரபாண்டியன் மற்றும் உறுப்பினர்களாக தனவேல், முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ், கவிஞர் மனுஷ்யபுத்திரன், ஏ.ஜெய்சன், ஆர்.ராஜேந்திரன், கோ. கருணாநிதி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி முழுமையாக செயல்படுகிறதா என்பதை கண்காணிப்பதற்காக தமிழ்நாடு அரசால் "சமூகநீதிக் கண்காணிப்பு குழுவை" அமைத்துள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இக்கண்காணிப்புக் குழு கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும், வழிகாட்டும், செயல்படுத்தும்.

❖ **உலக அளவில் நிலக்கரி எடுக்கப்படும் பகுதி - நெய்வேலி**

- உலக அளவில் நிலக்கரி எடுக்கப்படும் முதல் 50 பகுதிகளில் நெய்வேலி (14-வது) மற்றும் சென்னை (36-வது) இடம்பெற்றுள்ளது.
- நெய்வேலி (14), சென்னை (36), தூத்துக்குடி (131) மற்றும் மேட்டூர் (144) ஆகிய பகுதிகளில் நாட்டிலேயே அதிகம் நிலக்கரி எடுக்கப்படும் பகுதிகளாக உள்ளன.
- ஆற்றல் மற்றும் சுத்தமான காற்று ஆராய்ச்சி மையம் (CREA) இந்த தரவரிசைப் பட்டியல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

❖ **தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் பதவியேற்ற நாள் (மே 7 – 2021)**

- பெண்கள் அனைவருக்கும் கட்டணமில்லா பேருந்து பயண வசதி
- குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,000 (அனைவருக்கும்)
- 14 வகையான மளிகைப்பொருட்கள்
- ஆவின் பால் விலை ரூ.3 குறைப்பு
- பெட்ரோல் விலை ரூ. 3 குறைப்பு

❖ **தமிழ்நாடு நாள் - ஜூலை 18**

- 18 ஜூலை தமிழ்நாடு நாள் அன்று கடைபிடிக்கப்படும் என தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- 2019-இல் நவம்பர் 1 – மாநில நாளாக அறிவிக்கப்பட்டது.
- மெட்ராஸ் மாகாணம் 1967-ம் ஆண்டு ஜூலை 18-ஆம் நாள் (அண்ணாவின் ஆட்சி) தமிழ்நாடு என பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- 1956-இல் நவம்பர் 1-ஆம் தேதி இந்தியா முழுவதும் மொழிவாரியாக பிரிக்கப்பட்டது.

❖ **ஆதிச்சநல்லூரில் அகழாய்வு பணிகள்**

- ஆதிச்சநல்லூரில் 17 ஆண்டுகளுக்கு பிறகு மத்திய தொல்லியல் துறை சார்பில் அகழாய்வு பணிகள் தொடங்கப்பட்டது.
- தாமிரபரணி என்றழைக்கப்படும் பொருநை நதிக்கரையோரங்களில் உள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய பகுதிகளில் பண்பாட்டு தொடர்பான சான்றுகள் கிடைத்துள்ளன.
- நாட்டில் முதல்முறையாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் களம் ஆதிச்சநல்லூர் ஆகும். 1876-இல் முதன் முறையாக ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஜாகோர் அகழாய்வு மேற்கொண்டார்.
- பின்னர் 1896 மற்றும் 1904 காலத்தில் அலெக்சாண்டர் ரெயா அகழாய்வு மேற்கொண்டார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- முதுமக்கள் தாழி, மண்பாண்டங்கள், இரும்பு கருவிகள், ஆயுதங்கள், வெண்கலப்பொருட்கள், பழங்கால மனிதர்களின் எலும்புகள் கிடைத்தது.
- ஆதிச்சநல்லூரில் உலக தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று நிதிநிலை (2020) அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது

❖ **சாலை ஓரத்தில் வசிப்போர் - மனநலம் பாதிக்கப்பட்டோர் – 1913**

- சாலை ஓரத்தில் வசிப்போருக்கு, மனநலம் பாதிக்கப்பட்டோர் தகவல் தெரிவிக்க உதவி எண் – 1913 - ஐ சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ளது.
- அக்டோபர் 10 – உலக வீடு அற்றோர் தினம்

## இந்திய நிகழ்வுகள்

❖ **ஜல் ஜீவன் செயலி அறிமுகம்**

- ஜல் ஜீவன் செயலியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இதன் மூலம் இந்தியாவில் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோகத் திட்டம் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுவதுடன், அதன் மூலம் பயனடைபவர்களுக்கும் போதிய விழிப்புணர்வும் கிடைக்கும்.

❖ **இ-ஷ்ரம் தளம்**

- அமைப்புசாராத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புத்திறனை அறியவும் சமூக பாதுகாப்புத் திட்டங்களின் பலன்கள் அவர்களை சென்றடையவும் இ-ஷ்ரம் வலைதளத்தில் அவர்களின் விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

❖ **வேளாண் ரசாயன உற்பத்தியில் இந்தியாவுக்கு 4-ஆவது இடம்**

- உலக அளவில் வேளாண் ரசாயன உற்பத்தியில் இந்தியா 4-ஆவது இடத்தில் உள்ளதாக வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தெரிவித்தார்.

❖ **லட்சத்தீவில் மகாத்மா காந்தியின் முதல் சிலை**

- லட்சத்தீவில் மகாத்மா காந்தியின் முதல் சிலையை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்.

❖ **'உலகளாவிய தலைமை விருது - 2021**

- ஹெச்சிஎல் டெக்னாலஜீஸ் நிறுவனர் சிவ நாடார், டாஃபே நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மல்லிகா ஸ்ரீநிவாசன் ஆகியோர் 'உலகளாவிய தலைமை விருது 2021'-க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

❖ **உலக நாடுகளின் மருந்தகம் இந்தியா**

- உலக நாடுகளின் மருந்தகமாக இந்தியா உருவெடுத்து வருகிறது என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சவுமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.
- நான்கு மிகப்பெரிய சாதனைகளை இந்தியா படைத்திருக்கிறது. போலியோவை அறவே ஒழித்துள்ளது. பேறுகால உயிரிழப்பை கணிசமாக குறைத்துள்ளது. இதேபோல குழந்தைகள்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

உயிரிழப்பையும் குறைத்திருக்கிறது. நான்காவதாக உலக நாடுகளின் மருந்தகமாக இந்தியா உருவெடுத்து வருகிறது.

- **வடகிழக்கு மாநிலங்களுக்கு டிரோன் மூலம் கரோனா தடுப்பூசி**
  - வடகிழக்கு மாநிலங்களில் உள்ள கடினமான நிலப்பரப்புகளுக்கு 'ட்ரோன்கள்' மூலம் கரோனா தடுப்பூசிகளை அனுப்பும் திட்டத்தை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தொடக்கி வைத்தார்.
  - தெற்கு ஆசியாவிலேயே முதல் முறையாக தடுப்பூசிகளை அனுப்பிவைக்க இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட 'ட்ரோன்' பயன்படுத்தப்பட்டுள்ளது.
- **ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் கருப்புப் பூஞ்சை சிகிச்சை இணைப்பு**
  - ஆயுஷ்மான் பாரத் காப்பீட்டுத் திட்டத்தில் கருப்புப் பூஞ்சை நோய்க்கான சிகிச்சையையும் மத்திய அரசு இணைத்துள்ளது.
  - உலகின் மிகப் பெரிய காப்பீட்டுத் திட்டமான (ஆயுஷ்மான் பாரத்) 2018 செப்டம்பர் முதல் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.
- **தேசிய அளவில் "மின்னணு சொத்து அட்டை திட்டம்"**
  - 'மத்திய அரசு சார்பில் அறிமுகம் செய்யப்பட்ட மின்னணு சொத்து அட்டை திட்டம் கிராமப்புற பொருளாதார பலத்தை மேம்படுத்தியிருக்கிறது; இத்திட்டம் தேசிய அளவில் அமல்படுத்தப்படும்' என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
  - கிராமப்புறங்களில் மின்னணு சொத்து அட்டை வழங்கும் 'ஸ்வமித்வா' என்ற திட்டத்தை மத்திய அரசு கடந்த ஆண்டு தேசிய பஞ்சாயத்து ராஜ் தினமான ஏப்ரல் 24-ஆம் தேதி அறிமுகம் செய்தது.
- **அனைவருக்கும் கரோனா தடுப்பூசி செலுத்திய முதல் நகரம் சூரத்**
  - குஜராத் மாநிலம் சூரத் நகரில் தடுப்பூசி செலுத்த தகுதியடையவர்கள் அனைவருக்கும் முதல் தவணை கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- **காற்றில் மாசுபட்ட மாநிலங்களில் உத்திர பிரதேசம் முதலிடம்**
  - காற்றில் அதிகபட்சமான நுண்துகள்களால் மாசுபட்ட மாநிலங்களில் உத்திர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
- **மத்திய அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்க முதல்வர் தலைமையில் குழு அமைப்பு**
  - மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு (DISHA Committee) அமைப்பு துவங்கப்பட்டுள்ளது.
  - இக்குழுவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செலாளராக உறுப்பினர் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **கரோனா நெருக்கடி இந்தியா திறமையாகக் கையாண்டது: IMF**
  - கரோனா நெருக்கடியை இந்தியா திறமையாக கையாண்டதாக பன்னாட்டு நிதியம் (International Monetary Fund) பாராட்டு தெரிவித்துள்ளது.
  - 2021-2022-ம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.5 சதவீதமாக இருக்கும் என ஐஎம்எஃப் கணித்துள்ளது.
  - IMF: துவக்கம் - 27 டிசம்பர் 1945. தலைமையகம் - வாஷிங்டன், D.C.
  - உறுப்பினர் - 190 நாடுகள் (189 ஐநா நாடுகள் மற்றும் கொசோவோ)
  - நிர்வாக இயக்குனர் - கிறிஸ்டலினா ஜார்ஜீவா (பல்கேரியா).
- **ஐ.நா.மனித உரிமை கவுன்சிலுக்கு இந்தியா மீண்டும் தேர்வு**
  - ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் 2022-24- ஆம் ஆண்டுகளுக்கான உறுப்பினர் பதவிக்கு இந்தியா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - தொடக்கம் – 15 மார்ச், 2006. தலைவர் – நஷ்த் ஓமின்
  - தலைமையகம் – ஜெனீவா, சுவிட்சர்லாந்து
- **குஷிநகரில் சர்வதேச விமான நிலையம் திறப்பு**
  - குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். குஷிநகர் புத்தர் மறைந்த ஊராக நம்பப்படுகிறது.
  - புத்த மதத்தை பின்பற்றப்படும் 12 நாடுகளை சேர்ந்த (மங்கோலியா, மியான்மர், வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து, பூடான், கொரியா, நோபாளம், ஜப்பான்) உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.
- **வேளாண் இரசாயன உற்பத்தியில் இந்தியா 4-ஆம் இடம்**
  - உலக அளவில் வேளாண் இரசாயன உற்பத்தியில் (Agro-Chemicals) இந்தியா 4-ஆம் இடத்தில் உள்ளது. (அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சீனா முறையே முதல் மூன்று இடங்களில் உள்ளன).
- **பசுமை ஒத்துழைப்பு ஒப்பந்தம் – இந்தியா மற்றும் டென்மார்க்**
  - இந்தியா மற்றும் டென்மார்க் இடையே சுகாதாரம், வேளாண்மை, நீர் மேலாண்மை, பருவநிலை மாற்றம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய நான்கு துறைகளில் பசுமை ஒத்துழைப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
  - (டென்மார்க் பிரதமர் – மெட்டே ஃபிரட்ரிக் சென்).
- **வடகிழக்குப் பகுதியில் குடியரசுத் துணைத் தலைவர் சுற்றுப்பயணம்**
  - வடகிழக்குப் பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் துணைத் தலைவர் திரு எம். வெங்கையா நாயுடு மேகாலயாவின் ஷில்லாங் தேசிய நெடுஞ்சாலையில் ஷில்லாங் - தாவ்கி பிரிவில் சாலை மேம்பாடு மற்றும் அகலப்படுத்தும் பணிக்கு குடியரசுத் துணைத் தலைவர் அடிக்கல் நாட்டினார்.
  - லகாடாங் மஞ்சள், சுக்குப்பொடி புகழ் பெற்றது.
  - மேகாலயாவின் ரெபேக்கா முதல் பெண் தலைமைச் செயலர்.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **அடல் சுரங்க பாதை சாலை**
  - கடல் மட்டத்தில் இருந்து சுமார் 3000 மீட்டர்கள் (10,000 அடி) உயரத்தில், இமயமலையில் பிர் பஞ்சால் பகுதியில் உள்ள இமாச்சல பிரதேசம், மணாலி - ஜம்முவின் லே (லாஹாவ் - ஸ்பிட்டி பள்ளத்தாக்கு) பகுதியை இணைக்கும் திட்டமாகும்.
  - 9.02 கிலோ மீட்டர் நீளம் கொண்ட உலகில் மிக நீளமான சுரங்க நெடுஞ்சாலையாக உள்ளது.
- **இந்தியாவுக்கு சர்வதேச எரிசக்தி முகமை அழைப்பு**
  - சர்வதேச எரிசக்தி முகமையின் (IEA) முழுநேர உறுப்பினராக மாற இந்தியாவுக்கு அழைப்பு விடுத்துள்ளது.
  - 2017 ஆண்டில் இந்தியா இணை உறுப்பினர் ஆனது.
- **ஐ.நா. மனித உரிமை கவுன்சிலுக்கு – இந்தியா மீண்டும் தேர்வு**
  - ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்சிலுக்கு இந்தியா 6 வது முறையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மனித உரிமைகள் கவுன்சிலின் உறுப்பு நாடுகள் மூன்று வருட காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றன.
  - ஐ.நா. உறுப்பினர்கள்- 193
- **தேசிய பழங்குடியினர் நடனத் திருவிழா - 2021**
  - சட்டீஸ்கர் மாநிலம், ராய்ப்பூரில் அக்டோபர் 28 முதல் 30.வரை (2021) தேசிய பழங்குடியினர் நடனத் திருவிழா நடைபெற்றது
- **100 கோடி கரோனா தடுப்பூசி போட்டு சாதனை**
  - ஜனவரி 16, 2021 முதல் அக்டோபர் 21, 2021 வரை (279 நாட்கள்) வெற்றிகரமாக 100 கோடி (தடுப்பூசி) போட்டு இந்தியா சாதனை படைத்துள்ளது.
  - கோவிஷீல்டு – சீரம் நிறுவனம் (புனே)
  - கோவாக்சின் - பாரத் பயோ-டெக்
  - ஸ்புட்னிக் வி - ரஷ்யா
  - அதிகமாக போடப்பட்ட தடுப்பூசி – கோவிஷீல்டு
- **ஃபைசாபாத் ரயில் நிலையம் - அயோத்யா கண்டோன்மென்ட்**
  - உத்திரபிரதேசத்தில் உள்ள ஃபைசாபாத் ரயில் நிலையத்தின் பெயர் “அயோத்யா கண்டோன்மென்ட் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
  - ஃபைசாபாத் ரயில் நிலையம் 1874-இல் திறக்கப்பட்டது.
  - முகல்சராய் ரயில்வே சந்திப்பு – “பண்டிட் தீனதயாள உபத்யாய சந்திப்பு என மாற்றம்.
  - அலகாபாத் ரயில் நிலையம் – ‘பிரயாக்ராஜ்’ என மாற்றம்
- **புதிய நகர்பற இந்தியா கருத்தரங்கு மற்றும் கண்காட்சி – லக்னோ**
  - உத்திரப்பிரதேசம் லக்னோவில் நடைபெற்ற இக்கண்காட்சியில் பிரதமரின் நகர்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 75,000 வீடுகளுக்கான சாவிகளை பயனாளிகளிடம் பிரதமர் மோடி ஒப்படைத்தார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- மேலும், ஃபேம் 2 திட்டத்தின் கீழ் 75 பேருந்துகளை (லக்னோ, கான்பூர், வாரணாசி, பிரயாக்ராஜ், டோராக்பூர், ஜான்சி, காசியாபத்) பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

❖ **மேஜர் ஜெனரல் (ஒய்வு) சின்ஹோ ஆணையம்**
- பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு சலுகைகள் அளிப்பதற்கு அவர்களின் வருமான உச்சவரம்பை நிர்ணயிக்க அமைக்கப்பட்டது.
- மருத்துவ படிப்பில் இடஒதுக்கீடுச் சலுகை பெறுவதற்காக, (EWS) பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு 8-லட்சமாக நிர்ணயிக்கப்பட்டது.

❖ புதிய நகர்புற இந்தியா, உருமாறும் நகர்புறம் என்ற தலைப்பிலான மாநாடு – உத்திரப்பிரதேசம்

❖ பிரம்மபுத்திரா நதிக்கரையில் கலாச்சார மையத்தை துணை ஜனாதிபதி திரு.வெங்கய்யா நாயுடு துவங்கி வைத்தார்.

## பொருளாதாரம்

❖ **2022 நிதி ஆண்டில் இந்தியாவின் (GDP)**
- 2022 நிதி ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 8.3% வளர்ச்சி அடையும் என உலக வங்கி கணித்துள்ளது.

❖ **சர்க்கரை ஏற்றுமதியில் புதிய சாதனை**
- நாட்டின் சர்க்கரை ஏற்றுமதி கடந்த 2020-21 சந்தைப் பருவத்தில் சாதனை அளவாக 71 லட்சம் டன்னை எட்டியுள்ளதாக இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (Indian Sugar Mills Association) தெரிவித்துள்ளது.

❖ **IMPS முறையில் ரூ.5 லட்சம் வரை பணப் பரிமாற்றத்துக்கு அனுமதி**
- ஒரு வங்கிக் கணக்கில் இருந்து மற்றொரு வங்கிக்கணக்குக்கு உடனடியாக பணத்தை பரிமாற்றம் செய்ய உதவும் ஐஎம்பிஎஸ் முறையில் இனி ரூ.5 லட்சம் வரை பணப்பரிமாற்றம் செய்யலாம் என்று இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அறிவித்துள்ளது. இப்போதைய நிலையில் ஐஎம்பிஎஸ் முறையில் ரூ.2 லட்சம் வரையிலான பணப்பரிமாற்றத்தையே மேற்கொள்ள முடியும்.

❖ **இந்தியாவில் தங்கத்தின் தேவை மீண்டும் அதிகரிப்பு**
- இந்தியாவில் தங்கத்தின் தேவை மீண்டும் அதிகரித்து வருவதாக உலக தங்க கவுன்சில் (WGC) தெரிவித்துள்ளது.
- உலக தங்க கவுன்சில் தொடக்கம்: 1987
- தலைமையகம்: லண்டன். தலைவர்: கெல்வின் டஷ்னிங்கி

❖ **பிரதமரின் தலைமையிலான பொருளாதார ஆலோசனைக்குழு மறுசீரமைக்கப்பட்டது**
- செப்டம்பர் 25, 2017 அன்று பிரதமர் மோடி அவர்களால் பிரதமரின் தலைமையிலான பொருளாதார ஆலோசனைக்குழு மறுஉருவாக்கம் செய்யப்பட்டது.
- தலைவர்: பிபெக் டெப்ராய்
- தற்காலிக உறுப்பினர்கள் – பூனம் குப்தா, T.T.ராம் மோகன்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **பிரதமர் நரேந்திர மோடி WTO தலைவர் சந்திப்பு**
  - WTO தலைவர் நிகோஸி ஒக்காஞ்சோ இவெயல்லா 3 நாள் பயணமாக இந்தியா வந்தார். அவர் தில்லியில் பிரதமர் மோடியை சந்தித்தார்.
  - WTOவின் முதல் பெண் மற்றும் முதல் ஆப்பிரிக்கத் தலைவர் நிகோஸி ஒக்காஞ்சோ இவெயல்லா. இவர் நைஜீரியா நாட்டைச் சேர்ந்தவர்.
  - தலைமையகம் – ஜெனீவா, சுவிட்சர்லாந்து.
  - உறுப்பினர் நாடுகள் - 164
- **இந்தியாவின் பொருளாதாரம் 9.5% IMF**
  - நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 9.5% உயரும் என சர்வதேச நாணய நிறுவனம் தெரிவித்துள்ளது.
  - IMF **:** நிர்வாக இயக்குனர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா

## உலக நிகழ்வுகள்

- **'புளூ ஃபிளாக்' சர்வதேச போர் விமான கண்காட்சி**
  - இஸ்ரேலின் எய்லாட் நகரில் உள்ள அந்நாட்டு ஓவ்டா விமானப் படை தளத்தில் நடைபெற்று வரும் 'புளூ ஃபிளாக்' சர்வதேச போர் விமான கண்காட்சியில் இந்தியாவின் மிராஜ்-2000 போர் விமானம் பங்குபெற்றது.
- **உலகில் அதிகம் பேர் விரும்பி பார்க்கும் தென்கொரிய தொடர்**
  - தென்கொரியாவின் 'ஸ்குயிட் கேம்' திகில் தொடர், உலகில் அதிகம் பேர் விரும்பி பார்க்கும் இணைய தொடராக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- **சபஹார் துறைமுகம் ஈரான்**
  - ஈரானில் உள்ள சபஹார் துறைமுகத்தை சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து வழித்தடத்தில் இணைக்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.
  - டிசம்பர் 2018 ஆம் ஆண்டு முதல் இத்துறைமுகம் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ளது.
  - சபஹார் துறைமுகம், சஹிதன் இடையே இரயில் பாதையை இந்தியா அமைத்துள்ளது.
- **உலகின் முக்கிய தலைவர்கள் பற்றிய உண்மைகள் வெளியீடு**
  - உலகின் முக்கிய தலைவர்கள் பற்றிய உண்மைகளை "பண்டோரா பேப்பர்ஸ்" வெளியிட்டது.
  - பண்டோரே பேப்பர்ஸ் என்பது "வாஷிங்டன் போஸ்ட் " பிபிசி, கார்டியன் உள்ளிட்ட முக்கிய பத்திரிக்கைகள் தொலைக்காட்சிகள் சேர்ந்த 600 பத்திரிக்கையாளர்கள் சேர்ந்து தொடங்கிய புலனாய்வு அமைப்பாகும்.
- **உலகின் முதல் மலேரியா தடுப்பூசி**
  - உலகின் முதல் மலேரியா தடுப்பூசி, ஆப்பிரிக்க குழந்தைகளுக்குச் செலுத்தப்படவுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **பல்லுயிர் பாதுகாப்பு நிதி**

➢ வளரும் நாடுகளில் பல்லுயிர் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளுக்கு 1700 கோடி நிதி வழங்குவதாக "உயிரியல் பன்முகத்தன்மை" குறித்த ஐ.நா.வின் 15 தலைவர்கள் உச்சி மாநாட்டில் சீன அதிபர் ஜின்பிங் தெரிவித்தார்.

❖ **சூரிக் அருங்காட்சியகத்தில் இந்திய கலைக்கான ஆராய்ச்சி மையம்**

➢ ரைட்பெர்க் (Rietberg) அருங்காட்சியகத்தில் இந்திய கலைகளுக்கான பிரத்யேக ஆராய்ச்சி மையமும் ஃப்ல்லோஷிப் அமைப்பும் தொடங்கப்பட்டுள்ளது.

➢ ரைட்பெர்க் அருங்காட்சியகம், சுவிட்சர்லாந்தின் சூரிச்சில் அமைந்துள்ளது.

❖ **ஐஎம்எஃபிலிருந்து விலகுகிறார் கீதா கோபிநாத்**

➢ சர்வதேச நிதியத்தின் (ஐஎம்எஃப்) முதல் பெண் தலைமை ஆலோசகரான, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கீதா கோபிநாத் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பொறுப்பிலிருந்து விலகுவதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

❖ **ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயர் 'மெட்டா'**

➢ ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயர் மெட்டா' என மாற்றப்படுவதாக அதன் தலைமைச் செயல் அதிகாரி மார்க் ஜுக்கர் பெர்க் தெரிவித்துள்ளார்.

❖ **உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம்**

➢ உலக சுகாதார அமைப்பின் அடுத்த தலைவர் தேர்வுக்கு தற்போதைய தலைவர் டெட்ரோஸ் அதானோம் கேப்ரியேசஸைத் தவிர வேறு யாரும் போட்டியிடாததால், அவரே அந்தப் பொறுப்புக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

❖ **ஆக்ஸ் கூட்டணி**

➢ ஆஸ்திரேலியாவின் நீர்மூழ்கி கப்பல் படைத்திறனை மேம்படுத்தி இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் "ஆக்கஸ்' கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

❖ **உலகின் முதல் மலேரிய தடுப்பூசி - மாஸ்குயிரிக்ஸ்**

➢ பிரிட்டனின் கிளாஸ்க்ஸோ ஸ்மித் கிளைன் நிறுவனம் கண்டுபிடித்த தடுப்பூசியை ஆப்பிரிக்கா முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு முதல் முறையாக மலேரியாவுக்கு எதிராக வழங்கப்பட்டது.

❖ **ரஷியா ஹைபர்சோனிக் ஏவுகணை சோதனை வெற்றி**

➢ நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஹைபர்சோனிக் ஏவுகணையை செலுத்தும் சோதனையை முதல்முறையாக வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளதாக ரஷியா தெரிவித்துள்ளது.

❖ **சபஹார் துறைமுகம்-ஈரான்**

➢ இந்தியாவின் நிதியுதவியுடன் ஈரானில் "சபஹார் துறைமுகம்" கட்டமைக்கப்பட்டு வருகிறது.

❖ அமெரிக்காவில்- இந்துக்களின் பாரம்பரிய மாதமாக அக்டோபர் மாதம் அறிவிக்கப்பட்டுள்ளது



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## சுற்றுச்சூழல்

- **தாமாக வழக்கு பதிய "பசுமை தீர்ப்பாயத்துக்கு அதிகாரம்" உண்டு**
  - தாமாக வழக்கு பதிந்து உத்தரவு பிறப்பிக்க "பசுமை தீர்ப்பாயத்துக்கு அதிகாரம்" உண்டு என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு
  - தீர்ப்பாயம் இயற்கையை பாதுகாக்கவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தீரப்பில் குறிப்பிட்டுள்ளது.
  - தேசிய பசுமைத் தீர்ப்பாயம், இந்திய அரசியலமைப்பின் 21வது சட்ட பிரிவுக் கீழ் 2010-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- **விருதுநகரில் அறியவகை பட்டாம்பூச்சி**
  - Silver Forget me not (FMN) எனும் அறிய வகை பட்டாம்பூச்சி விருதுநகரில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை சரணாலயத்தில் காணப்பட்டது.
- **சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மக்கள் இயக்கம்**
  - ஆந்திர மாநிலம் கதியம் கிராமத்தை தாவர வளர்ப்பு மையமாக மாற்றிய பல்லா வெங்கண்ணாவின் 'நர்சரிராஜ்யானிகி ராராஜு ('Nursery Rajyaniki Raraju') சுயசரிதைப் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சி ஹைதராபாதில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு கலந்து கொண்டார்.
- **பருவநிலை மாற்ற உச்சி மாநாடு (COP-26)**
  - இங்கிலாந்தின் கிளாஸ்கோவில் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரதமர் மோடி அக்டோபர் 31 அன்று கலந்து கொள்கிறார். பிரதமர் மோடி அவர்கள் இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் இணைந்து 'One World, One Solar One grid' திட்டத்தை இம்மாநாட்டில் துவக்கவுள்ளனர்.
  - United Nations Framework Convention on Climate Change முதல் மாநாடு பெர்லின், ஜெர்மனி (1995) காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பால் (UNFCCC) உருவாக்கப்பட்டது.
  - உறுப்பு நாடுகள்: 197. தலைமையகம்: பான் (Bonn), ஜெர்மனி
  - .தலைவர் – பாட்ரிக்கா எஸ்பினோசா
  - அலுவலக மொழிகள்: அரபு, சீன, ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன் ஸ்பானிஷ்.
- **வனவிலங்கு மீட்பு மையம்**
  - நீலகிரியில் வனவிலங்கு மீட்பு மையம் அமைய உள்ளதாக வனத்துறை அமைச்சர் கே.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
  - காயம்பட்ட வனவிலங்குகளை மீட்டு மறுவாழ்வு அளிக்கும் மையம் முதுமலையில் அமையவுள்ளதாக தெரிவித்தார்.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **'டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் பிரேரனா மையம்'**
  - முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் 90-வது பிறந்த தினத்தை முன்னிட்டும், நாட்டின் 75-வது ஆண்டு சுதந்திரத்தை கொண்டாடும் வகையில் அம்ரித் மகோத்சவத்தை குறிக்கும் விதமாகவும், விசாகப்பட்டிணத்தில் உள்ள கடற்படை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தில் 'டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் பிரேரனா மையம்' திறக்கப்பட்டது.
- **புவி கண்காணிப்புக்காக செயற்கைக் கோள்களை ஏவ இஸ்ரோ திட்டம்**
  - புவி கண்காணிப்புக்காக இந்த ஆண்டு இறுதிக்குள் 3 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
  - இஓஎஸ்-4 (ரிசாட்-1ஏ) மற்றும் இஓஎஸ்- 6 (ஓசோன் சாட்-3) ஆகிய 2 செயற்கைக் கோள்களை பிஎஸ்எல்வி ரக ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
- **இந்தியாவின் முதல் செயற்கை கருத்தரிப்பு பண்ணி (Banni) எருமை**
  - ஐவிஎஃப் கருத்தரிப்பு முறையின் மூலம் இந்தியாவின் முதல் பண்ணி (Banni) வகை எருமை பிறந்துள்ளது. இதன் மூலம், நாட்டின் கால்நடை செயற்கை இனப்பெருக்க தொழில்நுட்ப முறை அடுத்தக் கட்டத்தை எட்டியுள்ளது.
  - குஜராத்தின் சோம்நாத் மாவட்டத்தில் இருக்கும் தனேஜில் அமைந்துள்ள சுசீலா ஆக்ரோ ஃபார்ம்ஸை சேர்ந்த வினய் எல் வாலா என்ற விவசாயியின் வீட்டில் இது நிகழ்ந்துள்ளது.

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

- **பாகிஸ்தானின் அணு ஆயுதத் தந்தை காலமானார்**
  - பாகிஸ்தானின் அணு ஆயுதத் தந்தை என்றழைக்கப்படும் அந்த நாட்டின் அணு விஞ்ஞானி ஏ.க்யூ.கான் காலமானார்.
  - இந்தியாவின் போபால் நகரில் பிறந்தவர் .
- **தேசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கி தலைவர் கே.வி.காமத்**
  - தேசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கியின் முதல் தலைவராக பிரபல வங்கித் துறை நிபுணர் கே.வி.காமத் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதி வழங்குவதற்கான ரூ.20,000 கோடியில் பிரத்யேகமாக இந்த வங்கி உருவாக்கப்பட்டுள்ளது.
- **எண்கள் மனனம்: சிங்கப்பூரில் தமிழ் சிறுமி சாதனை**
  - அதிக இலக்க எண்களை மனனம் செய்வதில் சிங்கப்பூரைச் சேர்ந்த தமிழ் சிறுமி புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.
- **ஆர்.கே.லட்சுமண் 100-ஆவது பிறந்த தினம்**
  - கார்ட்டூனிஸ்ட் ஆர்.கே.லட்சுமணின் 100-ஆவது பிறந்த நாளில் அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

- 2018 ஆம் ஆண்டு 'Timeless Lakshmanan' புத்தகத்தை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்.

- தேசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கியின் முதல் தலைவராக – K.V. காமத் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நீதிபதி A.K. ராஜன் குழு - NEET தேர்வின் தாக்கம்

# திட்டம்

- **ஸ்வயம்பூர்ண(தன்னிறைவு) கோவா திட்டம்**
  - கோவா மாநிலம், தன்னிறைவு (Swayampurna / ஸ்வயம்பூர்ண) திட்டம் மூலம் தற்சார்பு இந்தியா கனவை நிறைவேற்றியுள்ளது
  - திறந்தவெளி கழிப்பிடம் இல்லாதது, மின்சாரம், குழாய் மூலம் குடிநீர், ஏழைகளுக்கு உணவுப் பொருள் விநியோகம் போன்ற அனைத்து முக்கியத் திட்டங்களிலும் கோவா 100% சாதித்துள்ளது.
  - இந்தியாவின் 2-வது மிகப்பெரிய கேபிள் பாலம் கோவாவில் உள்ளது.
  - இந்தியாவில் பொது சிவில் சட்டம் (Uniform Civil Code) நடைமுறையில் உள்ள ஒரே மாநிலம் கோவா.
- **ஆயுஷ்மான் பாரத் திட்டம்**
  - உலகின் மிகப்பெரிய காப்பீடு திட்டம்
  - இத்திட்டத்தில் கருப்பு பூஞ்சை சிகிச்சை இணைப்பு
  - ஆண்டுக்கு ரூ.5,00,000 வரை இலவச மருத்துவ சிகிச்சை
  - இதனை தேசிய சுகாதார ஆணையம் மேற்கொண்டு வருகிறது
- **ஸ்வமித்வா திட்டம் - கிராம மக்களுக்கு சொத்து உரிமை**
  - ஏப்ரல் 24, 2020 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது
  - மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் திட்டமாகும்
  - குறிக்கோள் – கிராமப்புறங்களில் மின்னனு சொத்து அட்டை (உரிமை) வழங்குவது.
  - கிராமங்களில் ட்ரோன் (Drone) மூலம் நிலங்களை அளவிட்டு மறுவரை செய்வதை நோக்கமாக கொண்டது.
  - ட்ரோன் (Drone) தொழில்நுட்ப ஊக்குவிப்பு திட்டம் (கிராமங்களை அளவிடும், வரைபடம் எடுக்கும் ஆளில்லா விமானம்)
  - நிலங்கள் பயன்படுத்தி கிராம மக்கள் நிதிப்பயன்கள் மற்றும் கடன் பெறுவதற்கு வழிவகுக்கிறது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# மாநாடுகள்

❖ **ஆசியான் மாநாடு: மியான்மருக்கு தடை**

➢ தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ஆசியான்) மாநாட்டுக்கு மியான்மர் ராணுவ ஆட்சியாளர் மின் ஆங்லியாங்கை அழைக்க வேண்டாம் என்று மற்ற உறுப்பு நாடுகள் முடிவு செய்துள்ளன.

➢ அந்த நாட்டில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்து விட்டு ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

➢ ஆசியான் துவக்கம் : 8 ஆகஸ்ட் 1967, தலைமையகம்: ஜகார்த்தா

➢ உறுப்பினர் நாடுகள்: புரூனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம்.

❖ **புதிய நகர்ப்புற இந்தியா மாநாடு**

➢ நாடு சுதந்திரம் பெற்றதன் 75-ஆம் ஆண்டில் புதிய நகர்ப்புற இந்தியா: உருமாறும் நகர்ப்புறம் என்ற தலைப்பிலான மாநாட்டை உத்தர பிரதேசத்தில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

❖ **16-வது ஜி-20 தலைவர்கள் மாநாடு**

➢ ஜி-20' அமைப்பின் உச்சி மாநாடு, இத்தாலி தலைநகரான ரோம் நகரில் இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில், 'உலக பொருளாதாரம், உலக சுகாதாரம்' என்ற அமர்வில் பிரதமர் மோடி உரையாற்றினார்.

➢ ஜி-20 துவக்கம்: 2008. இத்தாலி பிரதமர் மேரியோ டிராகி

❖ **முழுநேர உறுப்பினராக இந்தியாவுக்கு சர்வதேச எரிசக்தி முகமை அழைப்பு**

➢ சர்வதேச எரிசக்தி முகமையின் (IEA) முழுநேர உறுப்பினராகுமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப்சிங்புரி தெரிவித்துள்ளார்.

➢ 2017-ஆம் ஆண்டில் இந்தியா அந்த முகமையின் இணை உறுப்பினரானது.

➢ IEA - அமைப்பு துவக்கம் : 1974. தலைமையகம் – பாரிஸ்

❖ **CVC மற்றும் CBI அமைப்புகளின் கூட்டு மாநாடு**

➢ மத்திய கண்காணிப்பு ஆணையம் (Central Vigilance Commission) மற்றும் மத்திய புலனாய்வு அமைப்பு (Central Bureau of Investigation) அமைப்புகளின் கூட்டு மாநாடு குஜராத் மாநிலம் கேவாடியாவில் பிரதமர் தலைமையில் நடைபெற்றது.

➢ CBI - 1963-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சிபிஐயின் முதல் இயக்குனர் டி.பி.கோஹ்லி. (D. P. Kohli).

➢ தற்போதைய இயக்குனர் சுபோத் குமார் ஜெய்ஸ்வால் (Subodh Kumar Jaiswal).



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- கே. சந்தானம் தலைமையிலான ஊழல் தடுப்பிற்கான குழு பரிந்துரைகளின் பேரில் இது பிப்ரவரி, 1964-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- முதல் **CVC** ஆணையராக நிட்டூர் சீனிவாச ராவ் (Nittoor Srinivasa Rau) தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- தற்போதைய ஆணையர் சுரேஷ் என் படேல் (Suresh N Patel).

❖ **14வது நகர்ப்புற நகர்வு மாநாடு “Urban Mobility Conference 2021”**

- நிலையான வளர்ச்சி இலக்குகளின் 2030 நிகழ்ச்சி நிரலை அடைவதற்கு நிலையான இயக்கம் மற்றும் உலகளாவிய அணுகல் ஆகியவை முக்கியமானவை என்று மத்திய அமைச்சர் ஸ்ரீ ஹர்தீப் S. பூரி கூறினார்.
- கருப்பொருள் : “Mobility for All”.
- சிறந்த பொது போக்குவரத்து வசதி உள்ள நகரம் – சூரத்
- நிலையான போக்குவரத்து அமைப்பு உள்ள மாநிலம் – கேரளா
- சாந்தினி சௌக் மறு அபிவிருத்தி திட்டத்திற்கு சிறந்த மோட்டார் அல்லாத போக்குவரத்து திட்டத்திற்கான விருது வழங்கப்பட்டது.

❖ **எக்ஸ்போ - 2022 : துபாய்**

- எக்ஸ்போ-2020 உலக கண்காட்சியின் தொடக்க விழா நடைபெற துபாயில் உள்ளது.
- ஏ.ஆர் ரஹ்மான் முயற்சியில் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு அரபு நாடுகளை சேர்ந்த பெண் இசைக்கலைஞர்கள் பங்கேற்கும் ‘பிர்தோஸ் ஆர்கெஸ்ட்ரா’ இசைக்குழுவினரின் புதுமையான இசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

❖ **G-20 நாடுகள் கூட்டமைப்பு மாநாடு-2023**

- 2023-ஆம் ஆண்டின் G-20 நாடுகள் கூட்டமைப்பு மாநாட்டிற்கு இந்தியா தலைமை ஏற்கவுள்ளது.

❖ **18-வது இந்தியா ஆசிய உச்சி மாநாடு**

- புருனே சுல்தான் ஹாஜி ஹசனல் போல்கியா அழைப்பின் பேரில் அக்டோபர் 28, 2021 அன்று நடைபெற்ற 18-வது ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொண்டார்.

## பாதுகாப்பு

❖ **ஜம்மு விமானப் படைத் தளத்துக்கு என்எஸ்ஜி பாதுகாப்பு**

- ஆளில்லா சிறிய ரக விமான (ட்ரோன்) தாக்குதலை எதிர்கொள்ளும் வகையில் ஜம்மு இந்திய விமானப் படைத்தளத்துக்கு தேசிய பாதுகாப்புப் படையின் (என்எஸ்ஜி) பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் எம்.ஏ.கணபதி கூறினார்.
- தேசிய பாதுகாப்புப் படை: செப்டம்பர் 22, 1986 -ல் நிறுவப்பட்டது.
- தலைமையகம்: புது டெல்லி.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **அமெரிக்க கடற்படை தலைமை தளபதி இந்தியா வந்தார்**

➢ மெரிக்க கடற்படை தலைமை தளபதி அட்மிரல் மைக்கேல் கில்டே 5 நாள் பயணமாக இந்தியா வந்தார்.

➢ இந்திய கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் கரம்வீர் சிங்.

❖ **பி – 15பி ரக போர்க்கப்பல் - விசாகப்பட்டினம்**

➢ மும்பையில் உள்ள மஸகான் கப்பல் கட்டும் தளத்தில் உருவாக்கப்பட்ட விசாகப்பட்டினம் போர்க்கப்பல், இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

➢ 15 பி திட்டத்தின் கீழ், 4 போர்க்கப்பல்களை, மும்பையில் உள்ள மஸ்கான் டாக்ஸ் லிமிடெட்(எம்டிஎல்) என்ற கப்பல் கட்டும் நிறுவனம் தயாரிக்க கடந்த 2011ம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதற்கு நாட்டின் முக்கிய நகரங்களான விசாகப்பட்டினம், மர்முகோவா, இம்பால் மற்றும் சூரத் என பெயரிடப்பட்டன.

## கூட்டுப்பயிற்சி

❖ **மலபார் கடற்படை பயிற்சி - 2021**

➢ 1992 முதல் இந்தியா & அமெரிக்கா இடையே ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

➢ 2015-ல் ஜப்பானும், 2020-ல் ஆஸ்திரேலியாவும் இணைந்தன. ஆதலால் தற்போது குவாட் நாடுகள் கூட்டு கடற்படை பயிற்சியாக மாறியுள்ளது.

| பெயர் | நாடுகள் | பயிற்சி வகை | இடம் |
|---|---|---|---|
| ஜிமெக்ஸ் (JIMEX) | இந்தியா & ஜப்பான் | கடற்படை | அரபிக் கடல் |
| 'புளூஃப்ளாக்' (நீலக் கொடி) கூட்டுப் பயிற்சி | இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கிரீஸ், இஸ்ரேல் | விமானபடை | ஜெருசலேம் |
| மித்ரசக்தி | இந்தியா & இலங்கை | இராணுவ பயிற்சி | அம்பாறை (இலங்கை) |
| கொங்கண் சக்தி | இந்திய & பிரிட்டன | முப்படை (முதல் முறை) | அரபிக் கடல் |

## விருதுகள்

❖ **'சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது 2021'**

➢ சென்னை பேராசிரியர் சாகேத் சௌரவுக்கு கணித அறிவியலுக்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான 'சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது 2021' வழங்கப்பட்டுள்ளது.

❖ **"Heroine of the Health" 2021- விருது**

➢ பேன்யன் அமைப்பின் நிறுவனர் திருமதி வந்தனா கோபிக்குமார் அவர்களுக்கு "Heroine of the Health" 2021-க்கான விருது வழங்கப்பட்டது. உலக சுகாதாரத்தில் பெண்கள் அமைப்பு (Women in Global Health) இவ்விருதை வழங்கியது.

❖ **ஆஸ்கர் விருது; 'கூழாங்கல்' தமிழ் திரைப்படம் பரிந்துரை**

➢ ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்க இந்தியா சார்பில் தமிழ் திரைப்படமான 'கூழாங்கல்' தேர்வு செய்யப்பட்டுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் நடைபெற்ற 50-ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் கூழாங்கல் திரைப்படத்துக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ **ரஜினிகாந்த்துக்கு தாதா சாகேப் பால்கே விருது**

- 67-ஆவது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் 2019-ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருதை நடிகர் ரஜினிகாந்துக்கு குடியரசு துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு வழங்கினார்.

❖ **வயலார் ராமவர்மா நினைவு இலக்கிய விருது**

- 45-வது வயலார் ராமவர்மா நினைவு இலக்கிய விருது பென்யமின் எழுதிய "மாந்தெளிரில் 20 கம்யூனிஸ்ட் வருடங்கள்" நாவலிற்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ **வயோஷ்ரேஷ்தா சமான (தேசிய) விருது**

- அக்டோபர் 1, உலக முதியோர் தினம், சிறப்பான சேவைக்கு (முதியோர் நலன்) வயோஷ்ரேஷ்தா சமான (தேசிய) விருது டாக்டர்.வி.எஸ். நடராஜனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ **மத்திய அரசு – சந்த் கபீர் விருது (2018) (நெசவாளர் விருது)**

- P. கிருஷ்ணமூர்த்தி (காஞ்சிபுரம்)
- 2019 மத்திய அரசின் சிறந்த நெசவாளர் விருது
- காமாட்சி ஹரி
- சரளா கணபதி
- ருக்மணி கண்ணியவேல்
- A. ஹரி

❖ **நோபல் பரிசு - 2021**

- வேதியியலாளர் ஆல்ஃபிரட் நோபல் என்பவரால் 1895-ல் தொடங்கப்பட்டது. முதல் பரிசு 1901-ல் வழங்கப்பட்டது.

| **துறை** | **நபர் / நபர்கள்** | **கண்டுபிடிப்பு** |
|---|---|---|
| மருத்துவம் | டேவிட் ஜூலியஸ் & ஆர்டம் படாபூடியன் (அமெரிக்கா) | மனிதர்கள் வெப்பநிலையையும் தொடுதலையும் உணர்ந்து கொள்வதற்கான உணர்விகளை (ரிசப்டர்ஸ்) கண்டுபிடிப்பு |
| இயற்பியல் | சுயூகுரோ மனாபே (ஜப்பான்), கிளாஸ் ஹாஸெல்மன் (ஜெர்மனி), ஜியோர் ஜியோ பாரிஸி (இத்தாலி) | பருவநிலை மாற்றம் தொடர்பான கண்டுபிடிப்பு |
| வேதியியல் | பெஞ்சமின் லிஸ்ட் (ஜெர்மனி), டேவிட் வில்லியம் கிராஸ் மேக்மில்லன் (பிரிட்டன்) | மூலக்கூறுகளை உருவாக்குவதில் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத, செயல்திறன் மிக்க, பாதுகாப்பான வழிமுறையைக் கண்டுபிடிப்பு |
| இலக்கியம் | அப்துல்ரஸாக் கர்னா (தான்ஸானியா / பிரிட்டன்) விருதைப் பெறும் முதல் கருப்பின ஆப்பிரிக்கர் | காலனி ஆதிக்கத்தின் பாதிப்புகள் குறித்து உணர்வுபூர்வமாக எழுதப்பட்டது |



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

| | | |
|---|---|---|
| அமைதி | மரியா ரெஸா (பிலிப்பின்ஸ்), டிமித்ரி முராடோ (ரஷியா). இருவரும் செய்தியாளர்கள் | தங்கள் நாட்டு அரசுகளின் அடக்குமுறையையும் மீறி, பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக போராடியவர்கள் |
| பொருளாதாரம் | அமெரிக்காவைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர்கள் டேவிட் கார்ட், ஜோஷுவாடி ஆங்கிரிஸ்ட், குயிடோ டபிள்யு இம்பென்ஸ் | குறைந்தபட்ச ஊதியம், குடியேற்றம், கல்வி ஆகியவற்றின் தொழிலாளர் சந்தை விளைவுகள் தொடர்பான ஆராய்ச்சி |

## விளையாட்டு நிகழ்வுகள்

- **இந்தியர்கள் 8 பேருக்கு சர்வதேச ஹாக்கி சம்மேளன விருது**
  - சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் 2020-2021-ஆம் ஆண்டுக்கான விருதுகள் அனைத்தையும் இந்த முறை இந்தியர்களே வென்றனர். மொத்தமுள்ள 8 பிரிவுகளிலும் அவர்களுக்கு விருது கிடைத்தது.

| விருது | பெயர்கள் |
|---|---|
| ஆண்டின் சிறந்த வீரர் | ஹர்மன் பிரீத் சிங |
| ஆண்டின் சிறந்த வீராங்கனை | குர்ஜித் கௌர் |
| சிறந்த கோல் கீப்பர் | பி.ஆர்.ஸ்ரீஜேஷும், சவிதா புனியா |
| சிறந்த வளர்ந்து வரும் வீரர் | விவேக் சாகர் பிரசாத் |
| சிறந்த வளர்ந்து வரும் வீராங்கனை | ஷர்மிளா தேவி |
| சிறந்த பயிற்சியாளர்கள் | கிரஹாம் ரெய்ட், ஜோர்ட் மாரினே |

- **ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி 2021**
  - பெரு நாட்டு தலைநகர் லீமாவில் நடைபெற்ற ISSF ஜூனியர் உலக சாம்பியன்ஷிப்பில் இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர்கள் 43 பதக்கங்களுடன் வரலாற்று வெற்றி பெற்று பதக்க பட்டியலில் முதலிடம் பிடித்தனர். USA இரண்டாமிடம் (21 பதக்கம்) பிடித்தது.
  - இதில் 17 தங்கம், 16 வெள்ளி மற்றும் 10 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும்.
  - இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை மானு பாக்கர் 4-ஆவது தங்கம் வென்றார். ஐந்து பதக்கங்களுடன் (4 தங்கம், ஒரு வெண்கலம்) அதிக பதக்கங்களை வென்ற முதல் இந்திய துப்பாக்கி சுடும் வீரர் என்ற மைல்கல் சாதனையை உருவாக்கினார்.
  - 14 வயதே ஆன நாமியா கபூர் இரண்டாவது தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.
  - ISSF தலைமையகம்: முனிச் (Munich), ஜெர்மனி;
  - ISSF 1907 -ல் நிறுவப்பட்டது.
  - ISSF தலைவர்: விளாடிமிர் லிசின் (Vladimir Lisin).
- **ஆசிய டேபிள் டென்னிஸ்**
  - கத்தார் நாட்டு தலைநகர் தோஹாவில் நடைபெற்ற ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய ஆடவர் அணி வெண்கலப் பதக்கம் வென்றது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **உலக மகளிர் அணி செஸ் சாம்பியன்ஷிப்: இந்தியா முதல் வெற்றி**
  - ஸ்பெயினில் நடைபெற்ற ஃபிடே உலக மகளிர் அணிகள் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா வெள்ளிப் பதக்கம் பெற்றது. ரஷ்யா தங்கம் வென்றது.
  - உலக மகளிர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா வென்ற முதல் பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது.
- **ஜுனியர் துப்பாக்கி சுடுதல் இந்தியா உலக சாதனை**
  - ஐஎஸ்எஸ்எஃப் ஜூனியர் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஐஷ்வரி பிரதாப் சிங் தோமர் உலக சாதனையுடன் (463.4 புள்ளி) தங்கப்பதக்கம் வென்றார்.
- **உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்**
  - நார்வே தலைநகர் ஆஸ்லோவில் நடைபெற்ற உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையை நிகழ்த்தினார் அன்ஷுமாலிக்.
- **தெற்காசிய கால்பந்து இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது**
  - மாலத்தீவுகளில் நடைபெற்ற தெற்காசிய கால்பந்து சம்மேளன சாம்பியன்ஷிப் (SAFF) போட்டியில் இந்தியா 8-ஆவது முறையாக சாம்பியன் ஆகி சாதனை படைத்துள்ளது.
  - சுனில் சேத்ரி இப்போட்டியில், ஆட்டநாயகன்' (இறுதி ஆட்டம்), 'தொடர்நாயகன்', 'அதிக கோல்கள் அடித்த வீரர்' (5 கோல்கள்) அகிய விருதுகளையும் வென்றுள்ளார்.
- **தேசிய குத்துச்சண்டை பயிற்சியாளர்கள் நியமனம்**
  - தேசிய ஆடவர் அணிக்கான குத்துச்சண்டை பயிற்சியாளர்களாக சுரஞ்ஜோய் சிங், தேவேந்திர சிங் ஆகியோரை தேசிய குத்துச்சண்டை சம்மேளனம் நியமித்துள்ளது.
  - செர்பியாவில் அக்டோபர் 24-ஆம் தேதி உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்போட்டி தொடங்கும் உள்ளது.
- **தமிழ்நாடு ஒலிம்பிக் சங்க தலைவர் தேர்வு**
  - தமிழ்நாடு ஒலிம்பிக் சங்க தலைவராக ஐசரி கணேஷ் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.
- **மீன்வளர்ச்சிக் கழகத் தலைவராக ந.கௌதமன் நியமனம்**
  - தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக ந.கௌதமனை நியமித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

## புள்ளி விவரம்

- **உலகாளவிய உணவுப் பாதுகாப்பு**
  - உலகளாவிய உணவுப் பாதுகாப்பு குறியீட்டில் இந்தியா 71-ஆவது இடம் பிடித்துள்ளது. மலிவாக உணவு கிடைக்கும் நாடுகளில் இந்தியாவை பாகிஸ்தான் பின்னுக்குத் தள்ளியுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- பிரிட்டனின் தி எகனாமிஸ்ட் ஊடகக் குழுமத்தைச் சேர்ந்த அமைப்பு உணவின் தரம், பாதுகாப்பு, மலிவான விலை உள்ளிட்டவற்றின் அடிப்படையில் 113 நாடுகளில் உணவு பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டது.

❖ **உலக பட்டினி குறியீடு (Global Hunger Index) - 2021**

- உலக பட்டினி குறியீட்டில் இந்தியா 27.5 புள்ளிகளை பெற்று 101- வது இடத்தில உள்ளது. மொத்த கணக்கெடுப்பு 116 நாடுகள்.
- இந்த குறியீட்டை Concern Worldwide and Welthungerhilfe (கன்சர்ன் வேர்ல்டுவைட் மற்றும் வெல்துங்கர்ஹில்ஃப்) கூட்டாக வெளியிட்டுள்ளன.
- 2020- ம் ஆண்டில் 94-வது இடத்தில் இருந்தது.

❖ **உலகளாவிய உணவு பாதுகாப்பு குறியீடு - 2021**

- உலகளாவிய உணவுப் பாதுகாப்பு குறியீட்டு 2021 - ல் 113 நாடுகளின் பட்டியலில் இந்தியா 71 வது இடத்தைப் பெற்றுள்ளது.
- பிரிட்டனின் தி எகானாமிஸ்ட் குழுமத்தைச் சேர்ந்த அமைப்பு உணவின் தரம்; பாதுகாப்பு; மலிவான விலை உள்ளிட்டவற்றின் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டது.
- 2030-ஆம் ஆண்டுக்குள் பட்டினி என்பது இல்லாத நிலை எட்டுவதே இலக்கு.
- 16 அக்டோபர் உலக உணவு நாள்

## புவிசார்குறியீடு

❖ **புவிசார் குறியீடு**

- புவிசார் குறியீடு பொருட்கள் பதிவு மற்றும் பாதுகாப்பு சட்டம் 1999-ன் கீழ் புவிசார் குறியீடு வழங்கப்படுகின்றது.
- 2005-ம் ஆண்டு டார்ஜலிங்க்கு முதன் முதலில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.
- நாட்டிலேயே அதிக பொருட்களுக்கு கர்நாடகம் மாநிலம் புவிசார் குறியீடு பெற்றுள்ளது.
- தொழில் ஊக்குவிப்பு உள்வர்த்தகம், வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் புவிசார் குறியீட்டை (GI Tag) வழங்குகிறது
- இந்தியாவில் மொத்தம் 431 பொருட்களுக்கு புவிசார் குறியீடு கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மட்டும் 41 பொருட்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ **கன்னியாகுமரி கிராம்புக்கு புவிசார் குறியீடு**

- கன்னியாகுமரி மாவட்ட மலைப்பகுதிகளில் விளையும் கிராம்புக்கு "கன்னியாகுமரி கிராம்பு" என புவிசார் குறையீடு வழங்கப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தாமொழியில் உற்பத்தியாகும் நெட்டை ரக தென்னைக்கு இதற்குமுன் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.
- 17-ம் நூற்றாண்டில் நாயக்கர்கள் ஆட்சியில் கலம்காரி ஓவியங்கள் பரிணாம வளர்ச்சியடைந்தன.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **கலம்காரி ஓவியங்கள், மரச்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு**
  - கள்ளக்குறிச்சி மரச்சிற்பம், கருப்பூர் கலம்காரி ஓவியம், தஞ்சாவூர் நெட்டி வேலை மற்றும் அரும்பாவூர் மரச்சிற்பம் ஆகிய கைவினைப் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பதிவகம் மூலம் புவிசார் குறியீடு அங்கீகார சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது.
- **தமிழக பொருட்களுக்கு புவிசார் குறியீடு (GI Tag)**
  - ஒரு புவிசார் குறியீடானது ஒரு குறிப்பிட்ட புவியியல் இருப்பிடம் அல்லது ஓரிடத்தில், பாரம்பரியமாக உற்பத்தி செய்யப்படும் வேளாண் பொருட்கள், இயற்கை பொருட்கள், கைவினைப் பொருட்கள் போன்றவற்றுக்கு (அடையாளம்) புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது.
  - மேலும், மதுரை மல்லிகை, காஞ்சி பட்டு, பவானி ஜமக்காளம், நீலகிரி தேயிலை, தஞ்சை ஓவியங்கள், திண்டுக்கல் பூட்டு, ஈரோடு மஞ்சள், கொடைக்கானல் மலைபூண்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா, காரைக்குடி கண்டாங்கி சேலை, பழனி பஞ்சாமிர்தம் போன்ற தமிழகத்தை சேர்ந்த பல பாரம்பரிய பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

## புத்தகம்

- **மாற்றுத் திறனாளிகள் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்த புத்தகம்**
  - “Swimming Against Tide” எனும் புத்தகம் மாதவி லதா அவர்களால் எழுதப்பட்டது.
  - இவர் பாரா தடகள வீராங்கனை மற்றும் சக்கர நாற்காலி கூடைப்பந்து கூட்டமைப்பின் தலைவராவார்.
- **“Gandhi Vinobha a Memoir’**
  - திருமலை அவர்கள் எழுதிய “Gandhi Vinobha a Memoir” புத்தகத்தை தமிழக அரசு பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்ற காந்தி அமைதி நிறுவனம் கோரிக்கை வைத்துள்ளது.
- **இந்திய பிரிவினை குறித்த வரலாறு**
  - தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் சந்தித்த இன்னல்களை தொகுத்து இந்திய பிரிவினை குறித்த வரலாறு என்ற புத்தகத்தை தகவல் ஒளிபரப்புதுறை தயாரித்துள்ளது.
  - இப்புத்தகத்தை வெளியிட்டவர் – தமிழக ஆளுநர் R.N. ரவி
- நர்சரி ராஜ்யானிகி ராஜீ – ஆந்திராவைச் சேர்ந்த பல்லா வெங்கண்ணாவின் சுயசரிதை புத்தகமாகும்.
- **திருக்குறள் – ஞானத்தின் முத்துக்கள் (Pearls of inspiration)**
  - திருக்குறளை ஞானத்தின் முத்துக்கள் என்று ஆங்கிலத்தில் டாக்டர்.எம்.ராஜாராம் ஐ.ஏ.எஸ் மொழிபெயர்த்துள்ளார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## முக்கிய தினம்

- அக்டோபர் 1 – தேசிய தன்னார்வ இரத்த தினம்
- அக்டோபர் 2 - அகிம்சை தினம்
- அக்டோபர் 4 - உலக வனவிலங்குகள் தினம்
  - கருப்பொருள் – காடுகள் மற்றும் வாழ்வாதாரங்கள்: பூமியையும் மக்களையும் தக்க வைத்தல்.
- அக்டோபர் 5 – தனிப்பெருங்கருணை நாள் (வள்ளலார் பிறந்த நாள்)
- அக்டோபர் 9 - உலக தபால் தினம்
- தேசிய அஞ்சல் வாரம் - 9 அக்டோபர் முதல் 15 அக்டோபர் வரை
- அக்டோபர் 10 – உலக வீடு அற்றோர் தினம்
- அக்டோபர் 11 - லோக் நாயக் ஜெய பிரகாஷ் நாராயண் பிறந்தநாள்
- அக்டோபர் 11 - சர்வதேச பெண் குழந்தைகள் தினம்
  - கருப்பொருள் 'டிஜிட்டல் தலைமுறை'
- அக்டோபர் 12 முதல் 20 அக்டோபர் வரை – எலும்பு வாரம்
- அக்டோபர் 12 – தேசிய விவசாயிகள் தினம்
- அக்டோபர் 15 - உலக மாணவர்கள் தினம்
- 16 அக்டோபர் உலக உணவு நாள்
- அக்டோபர் 21 – காவலர் தினம்
- அக்டோபர் 26 முதல் நவம்பர் 1 வரை ஊழல் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம்
- அக்டோபர் 31 – தேசிய ஒற்றுமை தினம் (இந்திரா காந்தி நினைவு நாள்)



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com